2010 ஏப்ரல் 15]

சிலைகள் என்கின்ற வகையிலே அந்தந்தக் கிராமத்தினுடைய தேவதைகளாகக்கூட மாறி அந்த மக்களே பாதுகாத்து வரக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட சிலைகளை பொதுமக்களுடைய பாதுகாப்பிலே விட்டுவிட்டு மற்ற சிலைகளை அந்த ஊர் மக்களுடைய அனுமதியோடு எடுத்து அகழ்வைப்பகங்களிலே, அருங்காட்சியகங்களிலே பாதுகாக்கக்கூடிய முயற்சியைத் தொடர்ந்து இந்த அரசு செய்து வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

47—

மின் வேலி

***113636—திரு. எம்.என். கந்தசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை, போளுவாம்பட்டி சரகம், சிறுவாணி முதல் ஆனைகட்டி பெரியநாயக்கன்பாளையம் வரையுள்ள மலையடிவாரப் பகுதிகளில் மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை, போளுவாம்பட்டி சரகம், சிறுவாணி முதல் ஆனைகட்டி பெரியநாயக்கன்பாளையம் வரை 3.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு வன எல்லைப் பகுதியில் சூரிய ஒளியில் இயங்கும் மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகளின் தொந்தரவுகளிலிருந்து அங்கு இருக்கின்ற

மக்களின் உயிரை முதலிலே காப்பாற்றியாக வேண்டும். முன்பெல்லாம் மலைவாழ் மக்கள்தான் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மலையிலேயிருந்து இறங்கி வருகின்ற யானைகளும் இரவு நேரங்களில் மட்டும்தான் வந்து கொண்டிருந்தன. இப்போது அந்த நிலைமையெல்லாம் மாறி பகலிலேகூட கிராமங்களிலே, நகர்ப்புறங்களிலே குறிப்பாக, மேட்டுப்பாளையம் சாலையை யானைகள் கடந்து வருகின்ற நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுவும் 10, 12 யானைகள் என்றிருந்த நிலை மாறி இப்பொழுது, கூட்டங்கூட்டமாக வருகின்றன. சென்ற மாதத்தில் 32 யானைகள், காலையிலே 9.30 மணியளவில் மேட்டுப்பாளையம் சாலையைக் கடந்ததை நானும் அறிவேன், எங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. பொங்கலூரார் அவர்களும் அறிவார்கள். அதையெல்லாம் தடுத்தாக வேண்டும்.

முற்பகல் 10-10

பகலிலே வருகின்ற யானைகள் வீடுகளிலே ஐந்து அடி உயரத்திலே இருக்கின்ற மதில் சுவர்களையெல்லாம் தாண்டி விவசாயிகள் வைத்திருக்கின்ற தவிடு, பிண்ணாக்கு போன்ற பொருட்களைச் சாப்பிடுவது மட்டுமல்லாமல், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்துகின்றன. அதனைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், கரும்பு, வாழை, மக்காச்சோளம், தென்னை போன்ற பயிர்களையெல்லாம் பெரிய அளவிலே சேதப்படுத்திவிடுகின்ற காரணத்தினால், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற நஷ்ட ஈட்டையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இக்கரை, போளுவாம்பட்டிச் சரகம் என்பது பேரூர் சட்டமன்றத் தொகுதியிலே, மதுக்கரை முதல் தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம், ஆனைகட்டி மற்றும் மேட்டுப்பாளையம் சரகத்தோடு முடிகிற ஒரு பெரிய சரகம். அந்தப் பகுதியிலே, தற்சமயம் பூச்சியூர், தெற்குப்பாளையம் பகுதியிலே மட்டும்தான் அகழிகள் வெட்டி, மின் வேலிகள் அமைத்திருக்கின்றார்கள். முதலிலே அமைத்துக் கொடுத்த மின் வேலிகளையெல்லாம் யானைகள் பிடுங்கியெறிந்து துவம்சம் செய்துவிட்டன. தற்சமயம் அங்கு மின் வேலிகள் இல்லை. ஆகவே, மின் வேலிகளை அகழிகளுக்கு மறு பக்கத்திலே அமைத்துக்

2010 ஏப்ரல் 15]

கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

அது ஒருபுறம்; இன்னொருபுறம், இந்த யானைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கந்தசாமி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். காட்டு யானைகள் வந்தால் எவ்வளவு சேதப்படுத்தும் என்று தெரியும். மின் வேலி அமைப்பார்களா, இல்லையா என்று மட்டும் கேளுங்கள்.

திரு. எம்.என். கந்தசாமி: பன்னிமடை, தடாகம், வீரபாண்டிபுதூர், தீட்டிபாளையம், காடிமடை போன்ற பகுதிகளிலெல்லாம் அகழிகள் வெட்டி, மின் வேலி அமைக்க வேண்டும். மனித உயிர்களும் காப்பாற்றப்பட வேண்டும், யானைகளும் காப்பாற்றப்பட வேண்டும். உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்; சென்ற 2009 ஆம் ஆண்டு, ஜூன் 18 அன்று இரண்டு பெண் யானைகள், ஓர் ஆண் யானை இறந்தன மற்றும் 2008 பிப்ரவரியிலே, கர்ப்பமாக இருந்த யானை குட்டியோடு இறந்திருக்கிறது. இவ்வாறு மூன்று யானைகள் இறந்திருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்காக, அந்தப் பகுதிகளில் மின் வேலிகள் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் பழங்குடி மக்கள்தான் பாதிக்கப்பட்டார்கள், இப்பொழுது அனைத்து மக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். மக்களெல்லாம் இடம் பெயர்ந்து வனத்தின் அருகிலே தங்களுடைய இல்லங்களை அமைத்து, காடுகளாக இருந்த பகுதிகளையும் விவசாயத்திற்காகத் திருத்தியமைத்திருக்கிறார்கள். நிலங்களை பட்டா செய்து கொடுத்திருந்தாலும்கூட, யானைகள் விரும்பி உண்ணும் பயிர்களான வாழை, கரும்பு, மக்காச்சோளம் போன்ற பயிர்களைப் பயிரிட வேண்டாம் என்று பல முறை வனத் துறையின் சார்பாக அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியும்

யானைகள் வந்தால், அவற்றைக் காட்டிற்குள்ளே விரட்டியடிப்பதற்கு வேட்டைத் தடுப்புக் காவலர்களெல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கும்கி யானைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இரவு நேரங்களில் யானைகள் வருகின்ற நேரத்தில், யானைகளைத் துரத்துவதற்காக சக்தி வாய்ந்த ஒளி உமிழ்கின்ற விளக்குகளெல்லாம் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. பட்டாசுகள் வெடித்து யானைகள் துரத்தப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூரிலிருந்து மேட்டுப்பாளையம் வரை இருக்கின்ற பகுதியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தப் பகுதியிலே இதுவரை 129.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. பேரூர் தொகுதியிலே 18 கிலோ மீட்டர் நீளமும், தொண்டாமுத்தூர் தொகுதியிலே 42 கிலோ மீட்டர் நீளமும், மேட்டுப்பாளையம் தொகுதியிலே 69 கிலோ மீட்டர் நீளமும் மின் வேலி அமைக்கப்பட்டு, பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது.

யானை கொஞ்சம் அறிவார்ந்த விலங்காக இருக்கின்ற காரணத்தால், சில நேரங்களிலே சூரிய மின் வேலியைக் காய்ந்த கட்டைகளைப் போட்டு உடைத்துவிட்டு உள்ளே வருகிறது என்பதை அறிந்து அகழிகள் வெட்டுவதற்காக C.R.P.F. Camp முதல் கருப்பராயன்கோயில் வரை மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. அதிலே, அவருடைய தொகுதியிலே, பூச்சியூர் வரை ஒரு கிலோ மீட்டர் வருகிறது. மீதம் உள்ள இரண்டு கிலோ மீட்டர் மேட்டுப்பாளையம் தொகுதியிலே வருகிறது. அகழிகளையும்கூட யானைகள் காலாலே மண்ணிட்டு நிரப்பிவிட்டு வருகின்றன. அதற்கெல்லாம் மாற்றாக, இன்னும் அதிக அளவிலே ஆழமாகவும், அகலமாகவும் அகழிகள் வெட்டுவதற்கும், இடைவெளி இல்லாமல் சூரிய மின் வேலி அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கும், தகுந்த அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி

2010 ஏப்ரல் 15]

தெரிவித்துக்கொள்கின்றேன். மின் வேலியோடு, முதுமலையிலே யானைகள் பாதுகாப்பு மையம் இருப்பதுபோல, ஒன்றை அங்கே அமைக்கலாம். ஏனென்றால், குருவாயூர் போன்ற இடங்களிலெல்லாம் யானைகளைப் பரிசாகக் கொடுக்கின்ற காரணத்தினாலே, ஏராளமான யானைக்ள் காட்டுப் பகுதியிலேயிருந்தும், கேரளாவிலேயிருந்தும் வந்துவிடுகின்றன என்பதுதான் உண்மை. ஆகவே, இதற்கும் அரசு ஏதாவது ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே யானைகளைப் பராமரிப்பதற்கான மூன்று, நான்கு மையங்கள் இருக்கின்றன. ஆனால், தமிழகத்திலே இதுவரையில் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதைப்போன்ற ஒரு மையத்தை இந்த ஆண்டு தொடங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதைப்பற்றிய விவரம் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அகழிகள் ஆழமாக இல்லை, அவற்றை ஆழப்படுத்த வேண்டும் என்றும், யானைகள் தம்முடைய காலாலே மண்ணைத் தள்ளி அகழியை மூடிவிடுகின்றன என்றும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதேபோல, மின் வேலிகளை அமைக்கிறபொழுது காய்ந்த மரக்கட்டைகளை அதன்மீது போட்டு தாண்டி விடுகிறதென்றும் குறிப்பிட்டார்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே இருந்த யானைகளின் வழித்தடங்களைத் தடுத்த காரணத்தினாலே அவை குடிநீருக்கு இறங்கி வருகிறபொழுதும், மேலே செல்கிறபொழுதும் பல்வேறு தடைகள் ஏற்படுகின்ற காரணத்தாலேயும் யானைகள் இதுபோன்ற நிலைகளை உருவாக்குகின்றன என்ற கருத்துகளை மக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

[2010 ஏப்ரல் 15

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது வனங்களையொட்டி கரும்பு, வாழை, மக்காச்சோளம் போன்ற பயிர்களைப் பயிரிடக்கூடாது என்று சொன்னார்கள். என்ன பயிர்களை அங்கே பயிரிட வேண்டுமென்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளாகத்தான் இதைச் சொன்னேன். இதைப்போன்ற பயிர்கள் யானைகளின் கவனத்தைச் சுண்டி இழுக்கின்ற காரணத்தால், அவை பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. இது அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்தான். யானைகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, இதெல்லாம் ஒரு தற்காப்பு நடவடிக்கைக்காகத்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் இழப்பீட்டுத் தொகையை வழங்கியிருக்கிறார்கள். இதுவரையில் இல்லாத அளவிற்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளிலே ரூ.2,72,84,000 இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் 125 கிலோ மீட்டருக்கு மேலாக மின் வேலி அமைக்கப்பட்டிருப்பதாக இங்கே சொன்னார்கள். மேட்டுப்பாளையத்தை ஒட்டியுள்ள மேட்டூர் தொகுதியிலே வரக்கூடியதும் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு தொடர்ச்சிதான். லக்கம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பெரியதண்டா, சின்னதண்டா, லக்கம்பட்டி, நீதிபுரம் போன்ற ஊர்கள், அதைப்போல தார்க்காடு, குரும்பனூர், ஆலமரத்துப்பட்டி, கத்தரிப்பட்டி போன்ற ஊர்களெல்லாம் மலையை ஒட்டிய

2010 ஏப்ரல் 15]

கிராமங்களாக இருக்கின்ற காரணத்தால், அங்கே எந்தப் பயிர் செய்தாலும் சரி, வாழை, கரும்பு, மக்காச்சோளம் மட்டுமல்ல மஞ்சள் போன்ற மற்ற பயிர்களை பயிர் செய்தாலும்கூட, கடந்த மூன்று ஆண்டுகளிலே அடிக்கடி யானைகள் வந்து தொடர்ந்து சேதங்களை உருவாக்கி வருகின்றன. நீண்ட நாட்களாக விவசாயிகளும் அந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேட்டூர் தொகுதிக்குட்பட்ட, மலையோரம் இருக்கக்கூடிய, எல்லைப் பகுதிகளில் மின் வேலிகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, மின் வேலி அமைக்கப்பட்ட பகுதிகளில் மின்கலப் பெட்டியில்—battery என்று சொல்கிறார்கள்—அடிக்கடி சார்ஜ் குறைந்து சக்தி இழந்துவிடுகிறது. பிறகு அதனைப் புதுப்பிப்பதற்கு நிதியில்லாமல், ஒப்பந்ததாரர்களும் எங்களால் இயலவில்லை என்று சொல்கின்ற காரணத்தினாலே, யானைகள் வருவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது. ஆகவே, மின்கலப் பெட்டிகளின் battery-களைப் புதுப்பிப்பதற்கு அல்லது வேறு மாற்று ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல மேற்குத் தொடர்ச்சி மலையின் அந்தப் பகுதியில் மட்டுமல்ல, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பகுதியில் 229 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின் வேலி போடப்பட்டிருக்கிறது. தருமபுரி மாவட்டத்திலே 54 கிலோ மீட்டர் தூரத்திற்குப் போடப்பட்டிருக்கிறது. அதைப்போல, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் 98 கிலோ மீட்டர் தூரத்திற்குப் போடப்பட்டிருக்கிறது. மேலும் தேவையான இடங்களைக் கண்டறிந்து மின் வேலி போடப்பட்டுள்ளது. முந்தைய ஆட்சியிலே 62.5 கிலோ மீட்டர் தூரம்தான் போட்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே 1,167.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின் வேலி ரூ.18,73,55,000/- செலவிலே இந்த நான்கு ஆண்டுகளிலே நிறுவப்பட்டிருக்கிறது. எனவே, அந்த இடம் விடுபட்டுப் போயிருந்தால் இந்த ஆண்டு

அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை ஊராட்சி மன்றங்களே அதனைப் பராமரித்து வந்தன. அவற்றால் சரியாகப் பராமரிக்க முடியவில்லை என்கிற காரணத்தால் இந்த ஆண்டு அதற்காக தனி நிதி ஒதுக்கி, அதையெல்லாம் சரி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சு.ப. வேலுமணி (குறுக்கீடு) நான் வேலுமணியைக் கூப்பிட்டிருக்கிறேன்.*

திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், என்னுடைய பேரூர் தொகுதிக்கு உட்பட்ட குனியமுத்தூர் நகராட்சி, சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் 40 நாட்களுக்கு முன்னால் செந்தில் என்ற விவசாயி யானையால் மிதிக்கப்பட்டு அகால மரணமடைந்தார். குடும்பமே அவரை நம்பித்தான் இருந்தது. நஷ்ட ஈடாக ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதி வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது அமைக்கப்படுகின்ற மின் வேலியை சுலபமாக யானைகள் தாண்டி வந்துவிடுகின்றன. புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சியில் அந்தப் பகுதியில் குறிப்பிட்ட தூரம் அகழி வெட்டப்பட்டது. அகழி வெட்டினால் கண்டிப்பாக யானைத் தொந்தரவு குறைவாக இருக்கும். மேற்குத் தொடர்ச்சி மலையிலே சுண்டக்காமுத்தூர், வாளையார், பேரூர், செட்டிபாளையம் போன்ற என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் எல்லாம் கடுமையான யானைத் தொந்தரவு இருக்கிறது. கண்டிப்பாக அகழி வெட்டுவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா, உயிர் சேதத்தையும், பயிர் சேதத்தையும் தடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போல வன விலங்குகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை ஒரு இலட்சம் ரூபாய் என்று மத்திய அரசாலே*

2010 ஏப்ரல் 15]

நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அந்தத் தொகைதான் வழங்கப்படுகிறது. அந்தத் தொகையை இன்னும் உயர்த்தித் தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு நாங்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதைப்போல, vulnerable points எவை என்று கண்டறிந்து, யானைகள் அதிகமாக வருகின்ற பகுதிகள் எவை என்று கண்டறிந்து அந்தப் பகுதிகளிலே அகழிகள் வெட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

48—

விபத்துகளைத் தடுத்தல்

***855—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வழிபாட்டுத் தலங்களால் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலை ஓரங்களில் 542 இடங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த வழிபாட்டுத் தலங்களின் ஆக்கிரமிப்புகள், சட்டம்-ஒழுங்கு பாதிக்காதவாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைக் கொண்டு அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன. அதாவது கடந்த டிசம்பர் திங்கள் வரை 93 வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும், சாலையோர வழிபாட்டுத் தலங்களால் விபத்துகள் ஏதும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் அடையாளப் பலகைகள், ஒளிரும் எச்சரிக்கைப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS